செ.வெ.எண்:40 நாள்:24.02.2020

**கரூர் மாவட்டம்**

**மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினத்தையொட்டி மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., தலைமையில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.02.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை, புதிய குடும்ப அட்டை, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 239 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மாவட்ட உயர் அலுவலர்களின் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மக்களைத்தேடி வருவாய்த்துறை அம்மா திட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது அக்கரை கொண்டு அது அவர்களின் உணர்வின் வடிவமாக நினைத்து அவற்றின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் இன்று மனு அளித்த உடனே தீர்வு காணப்பட்டு ஒரு பயனாளிகளுக்கு ரூ 7,600 மதிப்பில் மூன்று சக்கர மிதிவண்டியையும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுத் துறை சார்பில் பள்ளி ,கல்லூரி மாணவ மாணவிகளுக்கான மதுபானம் மற்றும் கள்ளச் சாராயத்தின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு பேச்சு, ஓவிய, கட்டுரை, மற்றும் கவிதை ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

முன்னதாக மாண்புமிகு மறைந்த முன்னால் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பிறந்தநாளை மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததையொட்டி இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி செல்வசுரபி, சமூக பாதுகப்பு திட்ட தனிதுணை ஆட்சியர் திரு.பாலசுப்ரமணியன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரெங்கராஜன், கலால் பிரிவு உதவி ஆணையர் திருமதி.மீனாட்சி, மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் திருமதி செம்கவள்ளி உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**